தூய தமிழ்க் காவலா
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

சென்னைமாநில

4-வது

# தமிழர் மாநாடு.

சர் ஏ. டி. பன்னீர்செல்வம்,

தலைமைப் பேருரை.

வேலூர்

27-12-'38.

எட்வர்ட் அச்சுநிலையம், திருவாரூர்.

00329

தூய தமிழ்க் காவலர்
கு. மு. அண்ணல்தங்கோ
நூலகம்

அருந்தமிழ் தோழர்களே!

இந்த நான்காவது சென்னை மாகாணத் தமிழ் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க என்னை அழைத்து என்னை பெருமை படுத்தியதற்காக என் மனமுவர்ந்த நன்றி உங்களுக்கு உரித்தானது. அவ்வண்ணமே எனது நன்றியை உங்களுக்குச் செலுத்துகிறேன்.

## யார் தமிழர்கள்.

இம்மகாநாட்டை மாகாண தமிழர் மகாநாடென்று குறித்திருப்பதால் தமிழர் என்னும் பதத்தின் உண்மைப்பொருளை நாம் சரியாக அறிகிறோமாவென்று சற்று சந்தேகத்திற்கு இடந்தருகிறது என்பதற்குட்பட்டவரையில் தமிழன் என்கிற பதத்திற்கு ஓர் அர்த்தமே பொருத்தமானது. யார் ஒருவர் தொண்டுதொட்டு தலைமுறைதத்துவமாக தமிழ் மொழியைத்தாய் மொழியாகக்கொண்டு அம்மொழியை பிரதானமாக அனுட்டித்து போற்றி வருவாரோ அவரே தமிழர் ஆவாரே அன்றி மற்றொருவருக்கும் அப்பதம் பொருத்தமாகாது. அன்னிய நாட்டினர் எவரும் தமிழ் மொழியில் பெரும் ஆராய்ச்சி செய்து தேர்ச்சிபெற்று புலமைத்தன்மை அடைந்திருப்பினும், தமிழ்மொழிக்கு என்ன அரும் பெரும் தொண்டு புரிந்திருப்பினும் அவர் தமிழர் ஆகமாட்டார். நம் நாட்டில் வீரமாமுனிவர் என்று போற்றப்பட்ட, மதுரை சேசுசபையைச் சேர்ந்த பெஸ்கிசாமியாரும் ஆங்கிலபாதிரியாராகிய போப்பய்யரும் நமது மொழியில் மிகவும் புலமை அடைந்தவர்கள் என்பது எல்லோருமறிந்த விடயம். வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியும், போப்பய்யரின் தமிழ் இலக்கணமும், மிகவும் பெருமை வாய்ந்த தமிழ் நூல்களாக இன்றும் மதிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் வீரமாமுனிவராவது, போப்பய்யாவது தமிழரென்று கருதப்படுவார்களா?

## பார்ப்பனர் தமிழர் ஆகமாட்டார்கள்,

அவ்வாறே வெளிநாட்டிலிருந்து நம்மிடத்தில் குடியேறியவர்கள், எவ்வளவு காலங்களுக்குமுன் நம்மிடம் வந்து சேர்ந்தவர்களாயினும், இந்நாட்டிலேயே எப்போதுமிருக்கும் நோக்கத்துடன் உள்ளவர்களாயினும் நம்தமிழ் மொழியை தன் மொழியாகக் கொள்ளாமல் இருப்பின் அவர்கள் தமிழர்கள் ஆகமாட்டார்கள். அவசிய நிமித்தமும் தன் சௌகரியத்தை உத்தேசித்து நம் மொழியைப் பழக்க

வழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு காரணத்தைக் கொண்டு மாத்திரம் தமிழராகமாட்டார்கள் குறிப்பாக நம் நாட்டில் பார்ப்பனர்கள் தமிழர் ஆவார்களா ஆகமாட்டார் என்பதுதான் என் முடிவு. நம் நாட்டில் அனேக நூற்றாண்டுகளாக இருந்திருந்தும் நம்முடன் கலவாமல் தங்களை ஒரு தனிப்பட்ட வகுப்பினராகவே வைத்துக்கொண்டது மாத்திரமல்லாமல் தாங்களே ஏனையோரை விடமேல் வகுப்பினர் என்று சொல்லிக்கொண்டு நம் சொந்தமொழி வடமொழியாகிய ஆரிய மொழியே என்றும் அம்மொழி நம்மொழியாகிய தமிழ் மொழியை விடமேன்மைப்பட்டதென்றும், அது ஒரு தெய்வீகமொழியென்றும், அம்மொழியே கடவுள்வணக்கத்திற்கும் மற்றுமுள்ள அவர்களுடைய சடங்குகளுக்கும் பொருத்தமானதென்றும், தமிழ்மொழி இக்காரியங்களுக்கு பொருத்தமற்றதென்றும், அதைஇழிவுபடுத்தி பேசுபவர்கள் எவ்விதத்தில் தமிழரென்று அழைக்கப்பட பொருத்தமுள்ளவர்களென்று எனக்கு விளங்கவில்லை ஆகவே பார்ப்பனர்கள் தமிழர் ஆகமாட்டார்கள் என்று சொல்வது மிகையாகாது.

## தமிழ் நாடு எது ?

மேலும், தமிழ்நாடு என்பது எந்த நாடென்று நிரணயிப்பதற்கு ஆராய்ச்சி வேண்டியதில்லை சென்னை நகரிலிருந்து குமரிவரையில் மலையாளத்துக்கு கிழக்கே உள்ள நாடே தற்காலத்திய தமிழ் நாடு என்று சந்தேகத்திற்கிடமில்லாமல் கூறலாம். நாம் இந்நாட்டிற்கு இப்போது இந்தியமாக்கடலில் மூழ்கிக்கிடக்கும் ஓரிடத்திலிருந்து வடக்கே வந்தோமா அல்லது ஆரியர்கள் வருகிறதற்கு பலநூற்றாண்டுகளுக்கு முன்னதாக மத்திய ஆசியாவிலிருந்து தெற்கே வந்தோமா, என்கிற விஷயம் சரித்திர ஆராய்ச்சிக்காரர் நிர்ணயிக்க வேண்டிய காரியம்.

ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்நாட்டிலேயே நாம்வாழ்ந்து வந்திருக்கிறது நம்நாடே நம்நாடென்பதும் இந்நாட்டு மக்கள் நாமே என்பதும் யாரும் மறுக்கமுடியாத விடயம்.

வடஇந்தியாவில் பல்வேறு மக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஒவ்வொருவரையும் பின்வருபவர் அடக்கி, ஒருவர் ஒரு காலத்திலும் மற்றொருவர் வேறொரு காலத்திலும் ஆதிக்கம் புரிந்து வந்ததாகவும் சரித்திர மூலமாகவும் அறிகிறோம்.

## தமிழர் வட நாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தில்லை

ஆனால் நாமும், நம்மைச்சேர்ந்த மற்றொரு திராவிட வகுப்பினரும், ஒரு காலத்திலும் இந்த வடநாட்டு ஆதிக்கங்களில் ஒன்றிற்காவது நாம் உட்பட்டிருந்ததாகத் தெரியவில்லை.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன் சந்திர குப்தர் என்னும் சக்கரவர்த்தியால் ஒரு புகழ்பெற்ற ஆட்சி வட நாட்டில் நடத்தப்பட்டதாகவும் அவருடைய பேரனாகிய அசோக சக்கரவர்த்தி காலத்தில் அவருடைய ஆட்சி ஏறக்குறைய இந்தியா முழுவதிலும் இன்னும் வெளிநாட்டிலும் பரவியிருந்ததாகவும் தெரிகிறது. ஆனால் அக்காலத்திலும் கூட நம் நாட்டில் நாம் மூவரசர்களாகிய, சேர, சோழ, பாண்டிய மன்னர்களே அரசு புரிந்து வந்ததாகவும் தெரிகிறது. இதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு மகம்மதியர்கள் வட இந்தியாவில் புகுந்து தங்கள், ஆதிக்கத்தை நிலைநிறுத்தி டெல்லிமாநகரத்தைத் தலைநகரமாகக்கொண்டு ஓர் பரவிய ஆட்சியை மொகல் சக்கரவர்த்திகள் நடத்திவந்திருக்கிறார்கள். அக்காலத்திலும் தென்னாட்டாராகிய நாம் அந்தஆதிக்கத்திற்கு உட்படாமல் தனிப்பட்டவகையிலேயே நம்முடைய காரியங்களை நடத்தி வந்திருக்கிறோம். ஆங்கில ஆட்சி நம் நாட்டில் நிலை பெற்றபிறகே நாமும் வட நாட்டினரும் ஒரே ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கிறோமே தவிர அதற்குமுன் எந்தக்காலத்திலும் நமக்கும் வட நாட்டினருக்கும் யாதொரு கலப்புமிருந்ததாகத்தெரியவில்லை. தற்காலத்திலும் தென்னாட்டு திராவிடர்களுக்கும் வடநாட்டு ஆரியர்களுக்கும் ஒத்துமையையோ, சம்பந்தத்தையோ காட்டக்கூடிய காரியம் ஒன்றே. அது எதுவெனில் நம்மிருவரும் ஒரே வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு உள்பட்டிருக்கிறதே ஆகும் மற்ற எல்லாக்காரியங்களிலும் நாம் வேறு அவர்கள் வேறு வகுப்பினராகவே காணப்படுகிறோம். மக்கள் பேசும் மொழியிலோ சாப்பிடும் உணவிலோ, உடுத்தும் உடையிலோ, மற்றபழக்க வழக்கங்களிலோ, நாம் வேறு அவர்கள் வேறாகவே இருக்கிறோம்.

மேலும் பூர்வீகக்கலை, நாகரீகம், இவ்விஷயங்களைப்பற்றி விசாரிப்போமானால் வடநாட்டு ஆரியர்களுக்கும் ஐரோப்பிய ஆரியர்களும் வெளிப்படும் சம்பந்தம் கூட நம்மவர்களுக்கும் வட நாட்டாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

## தமிழ் மக்களாகிய நாம் இந்தியர் அல்ல

இன்னம் ஆழ்ந்துபார்ப்போமானால் திராவிட மக்களாகிய நாம் இந்தியர்கள் அல்லவென்றே சொல்லவேண்டு. 'இந்தியர்' என்று ஒரு பதம் ஏற்படுவதற்கே காரணம்,

நம்நாட்டிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள பாஞ்சால தேசத்தில் ஓடும் 'இந்தஸ்' நதியே அந்த நதியின் பெயர் இந்தஸ் என்று இருந்தபடியால் அதை அடுத்தாற் போல் உள்ள நாட்டிற்கு இந்தியாவென்னும் பெயர் வழங்கப்பட்டது அந்த நாட்டில் குடியேறி இருந்த மக்கள் கிழக்கேபோகப் போக அந்த

பெயரும் அவர்களுடனே நகர்ந்துசென்றது ஆகவே காலக்கிரமத்தில் விந்தியமலை தொடர்புக்கு வடக்கே உள்ள நிலப்பிரிவு முழுவதிலும் இந்தப்பெயர் வழக்கத்தில் வந்தது அம்மக்களின் ஆதிக்கத்தின் கீழ் ஒருக்காலும் வராத நம் நாட்டிற்கு அது பொருத்தமாகாது ஆயினும் 2000 ஆண்டுகளுக்குமுன் வட இந்தியாவின்மேல் படையெடுத்துவந்த அலெக்சாண்டர் தீகிரேட்என்னும் ஒருதளகர்த்தனின் சரித்திரத்தை எழுதியகிரேக்கர் சரித்திர ஆசிரியர்கள் வடநாட்டைப்பற்றி எழுதும் போது இந்தியாவென்று எழுதினமையால் இந்தியதேசம் இருக்கிற விடயம் மேல்நாட்டார் அறிந்துகொள்ள வசதி ஏற்பட்டது ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள மேல்நாட்டார்கள் ஒரு பகுதிக் கும் மற்றொரு பகுதிக்கும்உள்ள வித்தியாசங்களை அறியாமையால் இமயமலைத்தொடர்புக்கு தெற்கேஉள்ளநாடு முழுமைக்கும் இந்தியா வென்று ஒரு பொதுப்பெயர் கொடுத்து அப்பெயர் இப்பொழுது நம் நாட்டிற்கும் வழங்கப்பட்டுவிட்டது.

## நம் நாகரீகமும் மொழியும் சீர்குலைந்து போனது

இவ்விதம் இருவகுப்பினரும் தனிப்பட்டமுறையில் வளர்ந்து வந்தபோதிலும் நாளடைவில் இருவகைக்கலைகளுக்கும் மொழிகளுக் கும் தொடர்புஏற்பட்டுவடநாட்டு நாகரீகத்தாலும் வடமொழியாலும் நம் நாகரீகமும், நம் மொழியும் சீர்குலைந்துபோனது என்பது மறுக்கமுடியாத விடயம். இவ்விதம் சீர்குலைந்தமைக்கு தனித்தமிழ் தேய்ந்து மற்ற திராவிடநாடுகளில் தெலுங்காகவும், கன்னடமாகவும், மலையாளமாகவும், இருந்துவருகிறதேபோதிய சான்றாகும். நாகரீகத் தைப்பார்ப்போமானால் சிறுவயதிலேயே பெண்களை மணந்துவைக்கிற தும் ஆண்துணை இழந்த பெண்களை மருமணமில்லாமல் வைப்பதும் தீண்டாமைப்பேயை நாட்டில்ஆடவிட்டிருக்கிறதும், நமக்குள்ளாகவே சாதி என்னும் பேரால் அநேகப்பிரிவுகளை ஏற்படுத்தி இருக்கிறதும், நமக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் சீர்கேட்டின் பல அடையாளங்களா கும். இவ்வுண்மைகளை நான் வற்புறுத்தி சொல்வதின் நோக்கம், நாமும் நம்மைச்சார்ந்த மற்ற திராவிட மக்களும் பூர்வீகம் தொட்டு வடநாட்டாருக்கு வேறுபட்ட வகுப்பினர் அவர்களுடன் நாம் கலந்து கொள்வதினால் நமக்கு இடையூறுகள் ஏற்படுமே தவிர வேறில்லை நம் நாடு ஒரு தனிப்பட்ட நாடென்பதை நாமெல்லோரும் உணரவேண்டு மென்பதே.

## பார்ப்பனர் ஆட்சி.

ஆகவே நாம் சம்பந்தப்பட்டவரையில் 'சுயராச்யம்' என்கிற வார் த்தைக்கு அர்த்தம் இருக்குமேயாகில் அந்த ராச்யம் தமிழ் அல்லது திராவிட ராச்யமாக இருக்கவேண்டும். ஆதிக்கத்தை நடத்துகிறவர்

கள் திராவிடர்களாய் இருந்தால்மட்டுமே அது உண்மையில் சுயராச்யம் ஆகும். இப்போது சென்னையில் நடைபெற்றுவரும் 'ராச்யம்' அப்பேற்பட்ட "சுயராச்யம்" ஆகுமாவென்று பார்ப்போமானால் இல்லையென்று திண்ணமாகச் சொல்லலாம். நமது மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்திவரும் பத்து பேர் கொண்ட மந்திரி சபையில் நான்குபேர் ஆரியர்கள் இச்சபையில் தலைமை வகித்து தான் ஒருவரே அதிகாரி மற்றவர்கள் பொம்மைகள் என்று பொது மக்கள் கருதக்கூடிய விதத்தில் நடத்திவரும் முதல் மந்திரி ஒரு பார்ப்பன ஆரியர் இப்படி அமைக்கப்பட்டிருக்கும் மந்திரிசபை தாங்கள் செய்யும் காரியங்களில் வாக்காளர்களாகிய தமிழர்களாகிய உங்கள் நோக்கத்தை எதிர்பார்க்கிறார்களா? இல்லை எல்லாக்காரியங்களிலும் காங்கிரசின் நிர்வாகக்கமிட்டியாரின் அபிப்பிராயத்தையும், தீர்மானங்களையும் எதிர்பார்த்தே நடத்துகிறார்கள் இந்த நிர்வாகக்கமிட்டியின் அங்கத்தினர்கள் அனைவரும் ஆரியரே, திராவிடர்கள் அல்ல என்பது உலகறிந்தஉண்மை இக்காரியக்கூட்டத்தாராவது தாங்களே சுயேச்சையாய் ஒருமுடிவுக்கு வருகிறார்களா? எல்லாக்காரியங்களிலும் அவர்களுக்கு அறிவூட்டும் தந்தையாகயிருப்பவர் காங்கிரசில் தான் 4 அணு அங்கத்தினர்கூட அல்லவென்று வாயளவில் பறையடித்துக்கொள்ளும் 'காந்தியார்' அவரும் திராவிடர் அல்லவென்பது உங்களுக்குத்தெரியும் ஆகவே இப்போது நமது மகாணத்தில் நடைபெற்றுவரும் ஆதிக்கம் சுயராச்யம் என்று சொன்னால் மக்களை ஏமாற்றுவதாகாதா? இவ்வாட்சி பார்ப்பனர் ஆட்சியென்றால் மிகையாகுமா இவ்வாட்சியை திராவிடமக்கள்மேல் ஆரியர்நடத்தும் ஆதிக்கமென்றால் பொருத்தமாகாதென்று யாராகிலும் சொல்லமுடியுமா? இவ்வாட்சியினரின் செய்கைகளில் சிலவற்றை மட்டும் பரிசீலனை செய்து அவைகள் திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு ஒத்ததாய் இல்லாவிடினும்எவ்வளவு தூரத்திற்குத்தற்கால நிலைமையாவது பாதுகாத்து அவர்களுடைய தன் மதிப்பை கெடுக்காமலாவது இருக்குமா என்று பார்ப்போம்.

## ஹரிஜன் என்று அழைப்பது அரசியல் சூட்சி.

நமது ஆதிதிராவிட சகோதரர்களை சிலகாலமாக "ஹரிஜன்" என்று காங்கிரசுவாதிகள் அழைக்கிறார்களே அதைப்பற்றி சற்று யோசிப்போம். எரவாடா சிறையில் அரசியல் சூட்சியில் பேர்போன காந்தியார் ஒடுக்கப்பட்ட வகுப்பினரை தேர்தலில் பொதுத்தொகுதியில் கொண்டுவந்து மாட்டக்கருதி, உண்டுபண்ணிய வார்த்தையாகும். இந்த ஹரிஜன் என்னும் பதம் நமது மந்திரிமார்கள் அதிகாரத்திற்குவந்ததுமுதல் இந்த வார்த்தையை சர்க்கார் உத்தரவுகளிலும் சட்டசபை நடவடிக்கைகளிலும் எந்தெந்த சந்தர்ப்பம் கிடைக்குமோ

அப்போதெல்லாம் உபயோகிக்கிறதல்லாமல் சட்டங்களில் முதற் கொண்டு இவ்வார்த்தையை புகுத்தியிருக்கிறார்கள். மக்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது நாளடைவில் அறியாமல் போவதற்கு அவர்கள் பெயரை மாற்றி அவர்களுக்கு ஒரு புதுப்பெயர், அதிலும் சொந்த மொழியில்லாமல் அன்னிய மொழியில் கொடுக்கிறதைவிட தகுந்தவழி வேறுண்டோ.

## சிரீ பட்டமும் இந்தியும்

அடுத்தபடியாக எல்லோருக்கும் இப்போது சிரீபட்டமும் அளித்திருக்கிறார்களே அதுதான் என்ன? தமிழ்மக்களாகிய நமக்கு வடமொழியிலுள்ள சிரீயை உபயோகிக்கிறதின் பொருத்தமென்ன? பொருத்தமில்லையேல் அதின் நோக்கமென்ன? அடுத்தாற்போல் ஆரிய மொழியை ஒத்து வந்த இந்தி மொழியை நம்மேல் சுமத்துவதின் நோக்கமென்ன? இச்செய்கைகள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட செய்கைகளா? அல்லது எல்லாம் ஒரே நோக்கத்துடன் நடைபெற்று வருகிறவைகளா? எந்தநோக்கத்துடன் இக்காரியங்கள் நடத்தப்பட்ட போதிலும் முடிவில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் நாம் பாதுகாத்து வந்திருக்கும் நமது தமிழ்க்கலையையும் தமிழ் நாகரீகத்தையும் நாம் தமிழரென்கிற உணர்ச்சியையும்கூட சாகடிக்கும் தன்மையுடையதல்லவா? இந்தி சம்பந்தமாக இன்னும் விரிவாக எடுத்துச்சொல்லுகிறது அவசியமில்லை என்று நினைக்கிறேன். எவ்விதம் அதைபுகுத்த மந்திரிமார் முயற்சித்து வருகிறார்கள் என்பதும், அதை எதிர்ப்போருக்கு விரோதமாக அடக்குமுறையை அனுட்டித்து வருவதும், அதுசம்பந்தமாக நூற்றுக்கணக்கான நமது மக்கள், ஆண்கள், பெண்கள், கைக்குழந்தைகள் முதற்கொண்டு சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பதும், விசேடமாக நமது பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரிந்தகாரியம். என்ன குற்றத்திற்காக இவர்கள் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள் என்றால், நம்மொழியாகிய தமிழ்வாழ விரும்பி, நம் கலையையும் நம் நாகரீகத்தையும் காப்பாற்ற வேண்டுமென்கிற கவலைகொண்ட ஒரே குற்றமே. இம்மந்திரிமார்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றே நீங்கள் எந்தக்காலத்திற்கும் அதிகாரம் வகித்திருக்கப் போவதில்லை. நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டிய நாள் தினந்தோறும் நெருங்கி வருகிறது அப்போது உங்களுக்குத்தமிழ் மக்கள் தக்க பதிலளிப்பார்கள் என்பதேதான்.

## மக்கள் படிப்பின்மையை விலக்கவேண்டும்.

முடிவாக நம் நாகரீகத்தையும் நம் கலையையும் காப்பாற்றிவளர்க்கவேண்டுமானால் என்னென்ன விடயங்கள் அவசியம்என்பதைப்பற்றி

சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலாக நம் மக்களிடம் உள்ள படிப்பின்மையை விலக்கவேண்டும் தொன்று தொட்டு நமது கிராமங்களில் இருந்துவந்த பழைய திண்ணைப்பள்ளிக் கூடங்களுக்குப் புத்துயிர்கொடுத்து பழைய முறையில் அப்பள்ளிக் கூடங்களை நடத்திவருவோமானல் எல்லாமக்களையும் குறுகிய காலத் திற்குள் படித்தவர்களாக ஆக்குகிறது கூடுமான காரியமென்பது என்னுடைய முடிவு. பணச்செலவும் பொறுக்கக்கூடியதாகவே இருக்கும். நான்கு ஆண்டு அளவில் பள்ளியில் தங்கும் பிள்ளைகள் நன்ருக எழுதப்படிக்கும் திறமை வாய்ந்தவர்களாகக்கூடும் நமது பள்ளிகளில் எந்தப்பள்ளியாகினும் ஆரம்பக்கல்வி முதற்கொண்டு பலகலைக்கழகங்கள் வரை தமிழ் படிப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது அத்தியாவசியம். தமிழுக்கென்று ஓர் பல் கலைக்கழகம் இருக்கவேண்டும். இப்போதுள்ள பல் கலைக்கழகங்களுளொன்ருவது அதற்கு உபயோகப்படாமல் போகுமாயின் ஒரு தனிப்பட்ட பல் கலைக்கழகம் ஏற்படுத்தவேண்டும். அக்கழகம் எவ்வகைப்பட்டதாயி னும் அந்த மேற்பார்வை பார்ப்பவர்கள் தமிழில் தேர்ச்சி அடைந்து திறமைவாய்ந்த தமிழர்களாகவே இருக்கவேண்டும்.

## நம் நாட்டை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுவது அவசியம்

எந்த நாட்டிற்கும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் திறமை அவசியமாகையால் அதற்காக ஒரு தரைப்பட்டாளமும் ஒரு கடல்படையும், அவசியம். இது சம்பந்தமாக நாம் உடனே செய்ய வேண்டியது நமது மாகாணப் படையைத் திரும்பவும் புதுப்பிக்க வழி தேடவேண்டும்.

## கிராம முன்னேற்றம்

தமிழர்களின் முக்கிய தொழில் பயிர்த்தொழிலானதாலும் அவர்கள் அநேகமாய் கிராமவாசிகளாகையாலும், கிராம முன்னேற்றத் திற்கு வேண்டியவிடயங்களைக் கவனிக்க வேண்டும். பயிர்ச்செயலின் புதுவழிகளை அனுசரிக்கிறது மல்லாமல் விளையும் பொருள்களை தக்க விலைக்கு விற்க வேண்டியது அவசியமாகையால் அதற்குள்ள வசதிகளையும், ஏற்படுத்த வேண்டும்.

## போக்குவரத்து வசதிகள்.

போக்குவரத்து வசதிகளைச்சீர்திருத்தவேண்டும். நம் நாட்டிலுள்ள துறைமுகங்களைச் சீர்திருத்தவேண்டும். அதன் காரணமாய் வியாபாரக்கப்பல்களும் ஏற்படுகிறதற்கு வசதிகளை உண்டுபண்ணவேண்டும்

## கிராமக் கைத்தொழில்கள்.

கிராமக்கைத்தொழில்களை ஆதரிக்க வசதிகள் ஏற்படவேண்டும் அத்தொழில்கள் நாடெங்கும் ஒரே தொழிலாயில்லாமல் இடத்திற்கேற்ற தொழிலை ஆதரிக்கவேண்டும். நான் மேற்கூறிய காரியங்கள் ஒரே தினத்தில் ஏற்படக்கூடியவை அல்ல நாளடைவில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டியவை உடனே இப்போதே நாம் கவனிக்கவேண்டிய விடயத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி என் முன்னுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## நாம் போர் புரியும் நோக்கம்

நாம் இப்போது அரசுபுரிந்துவரும் மந்திரிசபையாருடன் போர் புரிந்து வருகிறோம். அப்போரின் நோக்கமென்னவெனில் பல்லாயிரம் ஆண்டுகளாய் நமக்கென்று நம் முன்னோர் பாதுகாத்து நம்மிடம் ஒப்படைத்திருக்கும் நமதுபழைய மொழி, கலை, நாகரீகம் நம்முடைய தனிப்பட்ட வாழ்வு, இவைகளைக் காப்பாற்றவே இப்போரில் ஈடுபட்டதின் பலனாய் நான் முன்சொல்லியது போல் நமது அரும் பெரும் தலைவர் ஈ வே ராமசாமி பெரியாரும் இன்னும் சுமார் 600 தமிழ் மக்களும் சிறையில் அடைபட்டு வருந்துகின்றனர். இவ்விதம் அடக்கு முறையை அனுசரிப்பதால் நமது தைரியத்தைக் கலைத்து நம்மைத் தோல்வி அடையும்படி செய்யலாமென்று முதன் மந்திரிராஜகோபால ஆச்சாரியார் நம்புகிறார்கள் போலும், நாம் ஒற்றுமையாகவும் திடத்திடனும் இந்த ஆபத்தை எதிர்த்துப் போர்புரிய வேண்டியது நமது கடமையாகும் இப்போருக்கு வேண்டிய திரேக பலத்தையும், மன திடத்தையும் நம்மெல்லோருக்கும் கொடுக்கவேணுமாய் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.